விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 176 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 30 செவ்வாய்க்கிழமை (13.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## கோட்டாபயவே தவறிழைத்தார் பெரமுன தவறிழைக்கவில்லை

### சாகர காரியவசம்



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ தவறிழைத்தாரே தவிர பொதுஜன பெரமுன தவறிழைக்கவில்லை.

வெகுவிரைவில் தேர்தல் ஒன்று இடம்பெறும். ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெறும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 02

## மின்சாரக் கட்டணம் 3 வீதம் குறைப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டண திருத்தத்தின் அடிப்படையில் மொத்தக் கட்டணங்கள் 3 வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மின் கட்டணத்தை திருத்துவதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் 11

## எனக்கு வரலாற்றை கற்பிக்க முயற்சிக்கிறீர்களா?

# தொல்பொருள் திணைக்களத்தை கடும் தொனியில் எச்சரித்த ரணில்

### மக்களின் காணிகளை ஆக்கிரமிக்க இடமளிக்க முடியாது எனவும் சாடினார்



(கொழும்பு)

வரலாற்று முக்கியத்துவம்மிக்க விகாரைகள் உள்ளிட்டவற்றை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமிப்பதற்கு இடமளிக்க முடியாது என்றும் தேசிய கொள்கைகளை தொல்பொருள் திணைக்களம் பின்பற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)

## மிகச்சிறந்த தலைவர் பிரபாகரன்தான்!

### நடிகை கஸ்தூரி புகழாரம்



(ஒட்டவா)

உலகத் தமிழர்களுக்கு அடையாளம் தந்த தலைவர் பிரபாகரன், உலகின் மிகச்சிறந்த தலைவர் என நடிகை 11

### ஜனாதிபதி சாடியதன் எதிரொலி

## தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் பதவி விலகல்



(கொழும்பு)

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுர மனதுங்க பதவி விலகியுள்ளார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அனுர மனதுங்க கடிதம் ஒன்றின் மூலம் தமது பதவி விலகலை அறியப்படுத்தியுள்ளதாக அமைச்சர் 11

### கீரிமலை நல்லிணக்கபுரத்திலிருந்து

## நடேஸ்வராக் கல்லூரி வரை பஸ் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கீரிமலை நல்லிணக்கபுரத்தில் இருந்து காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி வரை புதிய பேருந்து சேவையொன்று நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதலாம் இரண்டாம் தர மாணவர்களுக்கு இலவசமாகவும் ஏனைய தர மாணவர்கள் சாதாரண கட்டணத்துடனும் குறித்த போக்குவரத்து 11

### கொற்றாவத்தையில்

## இளைஞனின் சடலம் மீட்பு

(கரணவாய்)

கொற்றாவத்தை மலையன்தோட்டம் பகுதியிலுள்ள காணி ஒன்றிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடல 11

### மக்கள் ஆணையைப் புறந்தள்ளி

## ஆட்சியைக் கொண்டு செல்லவே முடியாது

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

மக்கள் ஆணையைப் புறந்தள்ளி ஆட்சியைக் கொண்டு செல்லவேமுடியாதுஎனபாராளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமான ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள்

## மிரட்டல் விடுத்த சரத் வீரசேகர



(கொழும்பு)

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உணர்ச்சி வசப்படாமல் அமைதியாக இருக்க வேண்டும். இல்லையேல் சிறையில் அடைக்கப்படுவார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மிரட்டல் விடுத்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி எதனையும் சாதிக்கலாம் என்று கஜேந்திரகுமார், சாணக்கியன் உள்ளிட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணுகின்றார்கள். இது அவர்களின் அறியாத்தனம். இதற்காக அவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த தமிழ் மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது பொலிஸாரிடம் சண்டித்தனம் காட்டும் அளவுக்கு துணிவு வந்துள்ளது. அவர்கள் அனைத்து விடயங்களுக்கும் உணர்ச்சி வசப்படாமல் அமைதியாக இருக்க வேண்டும். வெறுமனே வாய்ச்சவடாலை விடுத்து அமைதியாக இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்கள் கைது செய்யப்பட்டு பிணை வழங்காமல் சிறையில் தான் தொடர்ந்து அடைத்து வைக்கப்படுவார்கள்.

எனவே முதலில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டம், ஒழுங்கு தொடர்பில் நன்றாகத் தெளிவடைந்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஆட்சியை...

கருத்து வெளியிட்ட அவர், மக்களின் ஆணைக்கு எதிராக ஆட்சியைத் தொடர்வது ஜனநாயக விரோதமானது என்றும் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கம் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ, அடுத்தாண்டு ஒக்டோபரில் ஜனாதிபதித் தேர்தலை நிச்சயமாக நடத்தியே ஆக வேண்டும்.

தேர்தல் ஒன்று இடம்பெற்றாலும் இடம்பெறாவிட்டாலும், எந்தவொரு வித்தியாசமும் நேர்ந்துவிடாது என்று ஜனநாயகத்திற்கு எதிரான கருத்தொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நுவரெலியாவில் வைத்து அண்மையில் தெரிவித்துள்ளார்.

அதுவும், உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் முன்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதாவது, இப்போதைக்கு நாட்டில் தேர்தல் ஒன்று நடக்காது என்பதை ஜனாதிபதி தெளிவாக தெரிவித்துள்ளார்.

ஆனால், அனைத்து எதிர்க்கட்சிகளும் இணைந்துதான் அத்தனை பாராளுமன்றுக்குக் கூட கொண்டுவரவிடாமல் தடுத்திருந்தன.

அரசாங்கத்தின் கொள்கைகளினால் நாட்டு மக்கள் கிளர்ந்தெழுவார்கள் என்று தெரிந்து கொண்டுதான் அரசாங்கம் இந்தச் சட்டமூலத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த நிலையில், ஊடகங்களைக் கட்டுப்படுத்த தற்போது அரசாங்கமானது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஒளிபரப்பு ஒழுங்குச் சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்படுமானால், 33 ஊடகங்களின் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும் அபாயம் காணப்படுகிறது.

அரசாங்கத்திற்கு எதிராக ஜனநாயக ரீதியாக எழுந்து நிற்கும் நிறுவனங்களையோ நபர்களையோ, பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் ஊடாக 20 வருடங்களுக்கு விளக்கமறியலில் வைக்கும் சட்டத்தை கொண்டுவர அரசாங்கம் முயற்சித்தது.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் இதற்கெதிராகவும் நடவடிக்கைகளை எடுத்துள்ளமையால், அரசாங்கத்திற்கு இதனை முன்கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சட்டங்களைக் கொண்டுவந்தால், எதிர்க்கட்சிகளிடமிருந்து சிறிதளவிலும் ஒத்துழைப்பு கிடைக்காது.

அத்தோடு, ஜனாதிபதித் தேர்தலை அடுத்தாண்டு நிச்சயமாக நடத்தியே ஆகவேண்டிய கட்டாயம் காணப்படுகிறது.

இதற்கான செயற்பாடுகள் ஒகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டு, செப்டம்பரில் வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்டு, ஒக்டோபரில் நிச்சயமாக தேர்தலை நடத்தியே ஆக வேண்டும்.

மக்கள் ஆணையை புறந்தள்ளி ஆட்சியைக் கொண்டுசெல்லவே முடியாது. குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாக இருந்தால், அதற்கு எம்மால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராகவே இருக்கிறோம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)



இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய சப்பைரத திருவிழா நேற்று இரவு இடம் பெற்றது.

## கோட்டா...

பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அளுத்கம பகுதியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அடிமட்ட மக்கள் ஆதரவுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2016 ஆம் ஆண்டு உதயமானது. நல்லாட்சி அரசாங்கத்தின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் 2019 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் என தொடர்ந்து மக்களாணையை உறுதிப்படுத்தினோம்.

30 வருடகால பயங்கரவாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்த ராஜபக்ஷர்களை பெரும்பாலான மக்கள் ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார்கள். ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளார்களே தவிர நாட்டுக்கு தீ வைக்கவில்லை.

கோவிட் பெருந்தொற்றின் பின்னரான காலப்பகுதியில் பொருளாதார பாதிப்பு அரசியல் நெருக்கடியாக மாற்றியமைக்கப்பட்டது.

இதற்கு மகிந்த ராஜபக்ஷவின் உருவப்படத்தை வைத்து அரசியலுக்கு வந்த தரப்பினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

2022 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதிக்கு பின்னர் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் உட்பட ராஜபக்ஷர்கள் அரசியலில் இருந்து விலகி விடுவார்கள் என நாட்டுக்கு தீ வைத்த மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் கருதினார்கள்.


பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்புடன் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தை ஸ்தாபித்துள்ளோம்.

வெகுவிரைவில் ஏதாவதொரு தேர்தல் இடம்பெறும் அப்போது எமது பலத்தை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் ரீதியில் தவறிழைத்தாரே தவிர பொதுஜன பெரமுன தவறிழைக்கவில்லை. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் அமைப்போம் என்றார். (ம-7)

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை மகேந்திரன்



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பொ.மகேந்திரன் நேற்று (12.06.2023) காலமானார்.

அன்னார் திரு.திருமதி பொன்னுத்துரை விசாலாச்சி தம்பதிகளின் புதல்வனும் திரு.திருமதி கனகசபாபதி சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான பொ.சச்சிதானந்தம், திருமதி கு.சரோஜினிதேவி, பொ.ஜெயசீலன், திருமதி இரா.ஜெயக்குமாரி, இந்திரா, விசாகமலர் மற்றும் பொ.தெய்வேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகேஸ்வரியின் (இந்திரா), அன்புக் கணவரும் கா.தமயந்தி (கூட்டுறவுச் சங்கம், பரு), ம.கேசவன் (Mercantile), இ.சுபேந்தினி (மக்கள் வங்கி - வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தி.கார்த்திகேயன் (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - பருத்தித்துறை), ம.இமையவன் (Bimputh finance, வவுனியா) ஆகியோரின் மாமனாரும் சாகித்தியா, இலக்கியா, விஸ்வதுளசி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2023) காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் (2ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை) நடைபெற்று கோரியடி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்,

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2ம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

(C-6727)

தகவல்:- குடும்பத்தினர்
076 029 9410

## நன்றி நவிலல்

10/10, புதிய வீடமைப்புத் திட்டம் குருநகர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்ட. 14.05.2023 அன்று இறைபதமடைந்த

### அமரர் அந்தோனிப்பிள்ளை றோஸ்மலர்



அவர்களின் இறப்பு செய்தி அறிந்து எமக்கு ஆறுதல் வார்த்தைகளால் தமது அன்பை தெரிவித்த அனைவருக்கும் எங்கள் நன்றிகளை கூறிநிற்கின்றோம். குறிப்பாக எமது உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். விசேடமாக எமது யாழ். மரியன்னை பேராலய பங்குத்தந்தை, உதவிப்பங்குத் தந்தையர்கள், குறிப்பாக மரியாயின் சேனை சபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மற்றும் அன்னம்மாள் சபை உறுப்பினர் அனைவருக்கும் எங்கள் உள்ளார்ந்த நன்றிகளை கூறிநிற்கின்றோம்.

10/10, புதிய வீடமைப்புத் திட்டம்,
குருநகர், யாழ்ப்பாணம்.

(15939)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம் ஏற்பட முதலில் எம்.பிக்கள் திருந்த வேண்டும்

## பந்துல அறிவுரை



(கொழும்பு)

இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் வகையில் மக்களில் ஒரு பகுதியினர் மட்டுமல்ல மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுகின்றனர். நாட்டில் இனவாத, மதவாத மோதல்கள் மீண்டும் உரு வெடுக்குமா? என்ற சந்தேகம் இதனால் எழுந்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்ச்சண்டைகள் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் இனவாத, மதவாத மோதல்கள் மீண்டும் உரு வெடுக்குமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இனவாதத்தையும் மத வாதத்தையும் தூண்டும் வகையில் மக்களில் ஒரு பகுதியினர் மட்டுமல்ல மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுகின்றனர். அவர்களின் கருத்துக்கள் நாட்டின் நீதித்துறைக்கு சவால் விடுக்கும் வகையில் அமைந்துள்ளன.

அதியுயர் சபையான பாராளுமன்றத்திலும் சபை விதிமுறைகளை மீறி மக்கள் பிரதிநிதிகள் கூச்சலிடுகின்றனர்.

இனவாத, மதவாதக் கருத்துக்களை அள்ளி வீசுகின்றனர். நாட்டில் நல்லிணக்கம் ஏற்படவேண்டுமெனில், முதலில் மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் திருந்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (4)

# நாட்டில் கூலித் தொழிலாளர்களாக சிறுவர்கள் மாற்றப்படும் அபாயம்

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சமூக நிலைமையை கருத்திற் கொண்டு சிறுவர்களை கூலித் தொழிலாளர்களாக பயன்படுத்தப்படும் அபாயம் காணப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை எச்சரிக்கைவிடுத்துள்ளது.**



அத்துடன், பாடசாலைகளை விட்டு இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், பாடசாலைக்கு தொடர்ச்சியாக அனுப்பாமல் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளும் அதிகளவில் அவதானிக்க முடிவதாகவும் அந்த அதிகார சபை சுட்டிக் காட்டியுள்ளது.

நாட்டின் தற்போதைய சட்டத்தின்படி, 16 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை அவர்களின் வாழ்க்கை, சுகாதாரம், கல்வி அல்லது தார்மீக வளர்ச்சிக்கு ஆபத்தில்லாத பணிகளில் மட்டுமே அமர்த்த முடியும்.

எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகளவான சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படும் அபாயம் காணப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (4)

# டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் அடையாளங்காணப்பட்டால் அபராதம்

(கொழும்பு)

வீடுகளில் அல்லது நிறுவனங்களில் டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் அடையாளம் காணப்பட்டால் அதற்கான அபராதம் விதிக்கும் நடைமுறை அடுத்தவாரம்.முதல் அமுலுக்கு வரவுள்ளது.

சமீப வாரங்களாக பல்வேறு விழிப்புணர்வு மற்றும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டாலும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் இது வரை 43 ஆயிரத்திற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்தோடு கடந்த ஐந்து மாதங்களில் 26 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேநேரம் நாட்டில் வேகமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகம் இரண்டு குழுக்களையும் நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# இலங்கையின் கடன் 3 மாதங்களில் 685 கோடி டொலர்களால் உயர்வு

(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் உள்நாட்டு கடன் அதிகரிப்பால் நாட்டின் மொத்த கடன் 685.3 கோடி டொலர்களாக அதிகரித்துள்ளது என்று திரைசேரி பகுப்பாய்வு அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் இறுதியில் நாட்டின் மொத்த பொதுக் கடன் 8470.3 கோடி டொலர்களில் இருந்து 9156.1 கோடி டொலர்களாக அதிகரித்துள்ளது.

கருவூல உண்டியல்கள், கருவூல பத்திரங்கள், பாதுகாப்பு அமைச்சின் கடன் கணக்கு, ஓய்வூதிய பணிக் கொடை போன்ற பல வழிவங்களில்அரசாங்கம் மேலும் கடன் வாங்கியதால் உள்நாட்டு கடன் டிசம்பரில் 4ஆயிரத்து 12 கோடி டொலர்களில் இருந்து மார்ச் மாதத்துக்குள், 4689 கோடி டொலர்களாக உயர்வடைந்துள்ளது.

இந்த ஆண்டு மார்ச் இறுதியில், அரசின் மொத்த வெளிநாட்டு கடன் 3609 கோடி டொலர்களாக காணப்பட்டது.

முக்கிய கடனாளிகளான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் ஆயிரம் கோடி டொலர்கள் , பாரிஸ் கிளப் நாடுகளிடம் 454 கோடி டொலர்கள், பாரிஸ் கிளப் அல்லாத நாடுகளிடம் 679 கோடி டொலர்கள் மற்றும் வணிக கடன்கள் 1470 கோடி டொலர்களாக கடன் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிநாட்டு கடன்களில் 70 வீதம் நிலையான வட்டி வீதத்தையும் 29 வீதம் தளம்பல் கொண்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# நாணய நிதிய ஒப்பந்தங்கள் அடுத்த 3 மாதங்களில் பூர்த்தி

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை அடுத்த மூன்று மாதங்களுக்குள் பூர்த்திசெய்ய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட 62 ஒப்பந்தங்களில் 25 மட்டுமே தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதன் முன்னேற்றம் குறித்து ஆராய, இது தொடர்பாக, மத்திய வங்கியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

வரையறுக்கப்பட்ட காலக் கெடுவுடன் செயற்றிட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், தற்போது அது முன்னேற்றம் அடைந்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்குள் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்துடன் தொடர்புடைய இலக்குகளை அடைவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (4)

# யாழைச் சேர்ந்த ஒருவரின் சடலம் இந்தியாவில் மீட்பு

(கொழும்பு)

இந்தியாவின் ஆந்திர பிரதேசத்தில் உள்ள தொடருந்து பாதைக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை சடலம் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவருடைய்து என சந்தேகிக்கப்படும் குறித்த மனித எலும்புக்கூடு ஒன்று இந்திய பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த அருணாசலம் சிவராசா என்பவரின் கடவுச்சீட்டும், இந்தியாவின் காசி கோயிலுக்குச் சென்றதாக இரண்டு மாதங்களுக்கு முன்னர் எழுதிய கடிதமும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த எலும்புக்கூடு அவருடையதாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவம் குறித்து ஆந்திர பொலிஸார் இலங்கைக்கு தகவல் அளித்துள்ளதுடன், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை உயர்ஸ்தானிகர் அலுவலகம் இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.(4-8)

# விசேட சுற்றிவளைப்பு 35 பேர் அதிரடியாக கைது

(கொழும்பு)

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் 35 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நேற்று முன்தினம் இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, 5 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயினுடன் இரண்டு சந்தேக நபர்களும், 3 கிராம் 15 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நான்கு சந்தேகநபர்களும், 03 கிராம் 35 மில்லிகிராம் கஞ்சாவுடன் 5 சந்தேகநபர்களும், 91 கஞ்சா கலந்த மதன மோதகங்களுடன் ஒரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 2 வாள்களை வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்கள், திறந்த பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட இருவர் மற்றும் 19 சந்தேக நபர்கள் சந்தேகத்தின் பேரில். விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று புதுக்கடை மற்றும் மாளிகாகந்த நீதிவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீக் சுற்றுக்கிண்ணம் - 2023

## நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சம்பியன்





யாழ்.உதைபந்தாட்ட லீக் சம்பியன் பட்டத்தை நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் வென்றது.

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடாத்தும் லீக் சுற்றுக்கிண்ணம் 2023 சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குருநகர் பாடும் மீன் விளையாட்டு கழகமும் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டு கழகமும் மோதியது.

அரியாலையில் உள்ள யாழ். உதைபந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில். மாலை 3.30 மணிக்கு குறித்த இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் சென் நீக்கிலஸ் சார்பாக வி.விக்னேஷ் என்ற வீரர் கோலை அடித்தார். பாடும் மீன் சார்பில் எந்த கோலும் பெறப்படாத நிலையில் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (4-33)

# லங்கா பிரீமியர் லீக்கில் களமிறங்கும் சுரேஷ் ரெய்னா

இலங்கையின் இவ்வாண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் தொடரானது எதிர்வரும் ஜூலை மாதம் 30 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இதனையடுத்து எல்.பி.எல் அணிகளின் உரிமையாளர்கள், தமது அணிகளுக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான ஏலம் எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

வெளிநாட்டு வீரர்கள் 140 பேர் உட்பட 500 இற்கும் மேற்பட்ட வீரர்கள் இவ் ஏலத்தில் பங்கேற்கவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

அந்தவகையில் இவ் ஏலத்தில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சுரேஷ் ரெய்னா கையெழுத்திட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

36 வயதான ரெய்னாவின் அடிப்படை விலை 50,000 அமெரிக்க டொலர்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)



# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2851

**கனுசிகா**

மதிப்பும் மரியாதையும் கிடைக்காத இடத்தில்...
கௌரவமான தலை குனிவு செல்போன்...



**டிபிஷன்**

மாமியார் மருமகள் சண்டையில மனைவி பக்கமும் இல்லாம அம்மா பக்கமும் இல்லாம பீரோ பக்கத்துல நிற்பவனே சிறந்த குடும்பஸ்தன்....



**சியானா**

வெஜ் சாப்பிட்டு இருந்தா வயித்துக்குள்ள கத்தரிக்காய், முருங்கைகாய் செடின்னு முளைக்குது...



அதை ஒழிக்கத்தான் நான்வெஜ் ஆடு, கோழின்னு உள்ள தள்ளுறோம்... எப்பிடி...

**அகிலன்**

ஆசிரியர்: நேற்றைக்கு எதுவரைக்கும் பாடம் நடத்தினேன்...



மாணவன்:- பெல் அடிக்கிற வரைக்கும் சார்!

**ஜெறின்**

வாழ்க்கையில எனக்கு கஷ்டம் வரும்போதெல்லாம் சீரியல் தான் பார்ப்பேன்...



அவங்களுக்கு வராத கஷ்டமா எனக்கு வந்திட போகுது...

**பிரசாந்**

மகன்: தூங்கும் போது யாரு fan off பண்ணது...



அப்பா:- கரண்ட்டு பில்லு கட்டுறவன்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய மருந்துகளுக்கு கட்டுப்பாடு விலை அவசியம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

நாளாந்த நோயாளர்களின் சிகிச்சைக்காக சுமார் 1,000 அத்தியாவசிய மருந்துகள் காணப்படும் நிலையில், இவற்றில் 60 மருந்துகளுக்கு மாத்திரமே விலைக் கட்டுப்பாடு காணப்படுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக கடந்த காலங்களில் பல அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் மக்களால் வாங்க முடியாத அளவுக்கு அதிகரித்திருந்ததாக அந்த சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே கூறியுள்ளார்.

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருவதால், அத்தியாவசிய மருந்துகளின் விலைகளும் குறைய வேண்டும் எனவும், அதனை வழங்குவதற்கு உரிய நடைமுறையை சுகாதார அமைச்சு தயாரிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மருந்து இறக்குமதியாளர்கள் தமக்கு விரும்பியவாறு மருந்துகளின் விலையை அதிகரிக்கின்றனர், ஆகவே இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் தலையிட வேண்டுமெனவும் மருத்துவர் ஹரித அலுத்கே கூறியுள்ளார். (4)

# ரயில் விபத்துக்களை தடுக்க அமைச்சு புதிய திட்டம்

(கொழும்பு)

அபாயகரமான ரயில் விபத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ரயில் திணைக்களம், நாடு முழுவதும் விசேட வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.

அதன்படி, ரயில் வலையமைப்பில் நாடளாவிய ரீதியிலுள்ள சுமார் 400 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் இ-கேட் அமைப்பை அமைக்க உள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ரயில் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பேரில் அரச அபிவிருத்தி மற்றும் கட்டுமானக் கூட்டுஸ்தாபனத்துடன் இணைந்து கோட்ஜென் இன்டர்நஷனல் ஆல் இந்த இ- கேட் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கொடகம ரயில் நிலையத்திற்கு அருகில் இ-கேட் பரீட்சார்த்த திட்டம், அண்மையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு, தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (4)

## கொழும்புத் துறைமுக நகரத்தில் சர்வதேச பல்கலைக்கழகம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்தில் மருத்துவ பீடத்துடன் கூடிய சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான டெண்டரை கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவ பீடம் தவிர, பொறியியல், வணிக மேலாண்மை, நிதி மற்றும் வங்கி தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலும் படிப்புகள் தொடங்கப்படும்.

கொழும்பை பிராந்தியத்தில் கல்வி நிலையமாக மாற்றும் அரசாங்கத்தின் இலக்கை அடைவதற்கான வசதிகளை வழங்குவதும் இந்தப் பல்கலைக்கழகத்தின் பொறுப்பாகும்.

சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் போன்று சர்வதேச தரத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்று போர்ட் சிட்டி கமிஷன் குறிப்பிட்டுள்ளது.

இப் பல்கலைக்கழகம் ஆறு மாதங்களுக்குள் நிறுவப்பட உள்ளது. டிப்ளோமா, பட்டம் மற்றும் முதுகலை படிப்புகளுக்கு மாணவர்களை சேர்க்க எதிர்பார்க்கப்படுகிறது. (4)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் விபத்தில் பலி!

(கொழும்பு)

கொழும்பு - குருநாகல் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

துல்ஹிரிய பிரதேசத்தில் முச்சக்கர வண்டி ஒன்று டிப்பர் வாகனத்துடன் மோதியதில் இன்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய், மகன் ஆகியோர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர்கள் 40, 39 மற்றும் 13 வயதுடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)





பத்து இலட்சம் அதிர்ஷ்டசாலிகள் 03

திருநெல்வேலி, காங்கேசன்துறை, ஹபரன

| | | |
|---|---|---|
| திருநெல்வேலி விற்பனை முகவர் திரு.ஜே. சதுர்சன் | காங்கேசன்துறை விற்பனை முகவர் திருமதி ஜே. அருனி | ஹபரன விற்பனை முகவர் திருமதி துஷாரா ஹேமமாலி |

இரண்டு இலட்சத்துக்குரிய இலக்கங்கள் பொருந்துவதன் மூலம்

இரண்டு இலட்சத்துக்குரிய அதிர்ஷ்டசாலிகள் 05

| | |
|---|---|
| 0729319 | திரு. பிரியங்க ரத்னவீர ஹொரண |
| 0508403 | திரு. அமரதேவ ரன்கொத்கே கெங்கல்ல |
| 1104195-1104874 | திரு.டீ. சண்முகதாஸ் சுன்னாகம் |
| 1096700 | திரு சு. சுதர்சன் மன்னிக்கை |

ஒரு இலட்சம் இலக்கத்தை 50443 பொருத்துவதன் மூலம் இலட்சாதிபதிகள் 45

வெற்றியீட்டிய லொத்தர்களை விற்பனை செய்த மாவட்டங்கள் மற்றும் அதிர்ஷ்டசாலிகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு

கொழும்பு 05 | யாழ்ப்பாணம் 05 | குருநாகல் 05 | கம்பஹா 03 | களுத்துறை 03
கண்டி 03 | பதுளை 02 | காலி 02 | கேகாலை 02 | மாத்தளை 02 | மொனராகலை 02
திருகோணமலை 02 | அனுராதபுரம் 01 | அம்பாறை 01 | ஹம்பாந்தோட்டை 01
முல்லைத்தீவு 01 | மாத்தரை 01 | நுவரெலியா 01 | புத்தளம் 01
இரத்தினபுரி 01 | NLB நடமாடும் சேவை ஊடாக 01

NLB தேசிய லொத்தர்
வாழ்வின் கனவிற்கு - அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
(C-2034)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனின் குரலைக் கேட்பதற்காவது ஏதேனும் வழிவகை செய்து தாருங்கள்

## சாந்தனின் தாயார் மோடியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தன்னுடைய மகன் மீண்டும் தன்னுடன் வந்து சேர்வதற்கு பிரதமர் மோடி உட்பட அனைத்து தலைவர்களும் வழிவகை செய்ய வேண்டும் எனவும், தனது கண்பார்வை கெட்டு போவதற்கு முன்னதாக மகனை பார்க்க வேண்டும் எனவும் சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில்,

கார்த்திகை மாதம் 11 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்ட எனது மகன் வருவார் என்று எதிர்பார்த்து காத்திருந்த போதிலும் இது வரையிலும் எந்த தொடர்பும் கிடைக்கவில்லை.

மகன் இது தொடர்பாக பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளமையை பத்திரிக்கை வாயிலாக அறிந்து கொண்டேன். பிரதமர் மோடி எனக்கு மகன் போன்றவர். நான் அவரிற்கு தாய் போன்றவர். ஆகவே அவர் எனது மகனை என்னுடன் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

32 வருடங்களாக பிள்ளையின் குரலை கேட்கவோ அல்லது முகத்தை பார்க்கவோ இல்லை. பாவம் செய்த குடும்பமாகவும் வித்தியாசமாக தியாகம் செய்த குடும்பமாகவும் நாம் உள்ளோம்.

பிள்ளை இங்கு வருகின்ற வேளையில் ஒரு மாதமாவது நான் சமைத்து கொடுக்க வேண்டும். மகனின் குரலை கேட்பதற்கு ஆவது ஏதேனும் வழிவகை செய்து தாருங்கள் என பிரதமர் மோடியிடம் மன்றாட்டமாக கோரிக்கை விடுத்துள்ளார். (4-6)

# வடமாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடிய சுமந்திரன் எம்.பி




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போது வடக்கில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள், நிர்வாக நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநராக இருந்த ஜீவன் தியாகராஜா ஜனாதிபதியால் நீக்கப்பட்டு புதிய ஆளுநராக சார்ள்ஸ் நியமிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் முதல் தடவையாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-33-104)

# சந்நிதியிலிருந்து கதிர்காமம் வரையான பாதை யாத்திரை நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமம் வரையான பாதயாத்திரை நேற்று காலை 8 மணியளவில் ஆரம்பமாகியது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் தலைமையில் இடம்பெறும் இந்த யாத்திரை சந்நிதியான் ஆலய பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகியது.

குறித்த யாத்திரிகர்கள் மட்டக்களப்பு உகந்தை முருகன் ஆலயம் சென்று அங்கிருந்து சுமார் 300 இளைஞர்கள், யுவதிகள் யாத்திரை செல்லவுள்ளனர். (4-6-33)

# பழுதடைந்த கௌபியை விற்ற வர்த்தகருக்கு அபராதம்

(கரணவாய்)

பாவனைக்கு உதவாத கௌபியை விற்ற வர்த்தகருக்கு 5ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி சுகாதார பணிமனைக்குட்பட்ட நெல்லியடி பொதுச் சுகாதார பிரிவினரால் வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது நெல்லியடி வர்த்தக நிலையம் ஒன்றில் பழுதடைந்த கௌபியை விற்பனை செய்த வர்த்தகர் ஒருவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யபட்டு பருத்தித்துறை நீதி மன்றத்தால் குறித்த வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (4-60)

# 90 போதை மாத்திரைகள் மீட்பு இளைஞன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் விசேட அதிரடி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 9 அட்டைகளில் 90 மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் மீட்கப்பட்ட மாத்திரைகளையும், கைது செய்யப்பட்ட நபரையும் ஒப்படைத்துள்ளதாக விசேட அதிரடி படையினர் தெரிவித்தனர். (4-6-33)

# பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை தாக்கிய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்கு போலியான கடவுச்சீட்டினை பயன்படுத்தி தப்பிச்செல்ல முற்பட்டபோதே யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதன்போது அவரிடம் இருந்து, போலியான கடவுச்சீட்டுகள் இரண்டும் கைத்தொலைபேசிகள் இரண்டும் மீட்கப்பட்டுள்ளன

குறித்த நபருக்கு மல்லாகம், ஊர்காவற்துறை நீதிமன்றங்களில் கஞ்சா வழக்கு நிலுவையில் உள்ளதோடு பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகளுடன் தேடப்பட்டு வந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். (4-6-33)

# இராசிபலன்

13.06.2023
வைகாசி 30, செவ்வாய்க்கிழமை
தசமி பிற்பகல் 12.16 மணிவரை
ரேவதி பிற்பகல் 4.20 மணிவரை

சுபநேரம்-10.22-11.52 மணிவரை
இராகுகாலம்-2.52-4.22 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்-
பூரம், உத்தரம்

வளவன்

**மேஷம்**: சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கடகம்**: விரத வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்,

**துலாம்**: நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், செய்தொழிலில் உற்சாகத்தோடு பணி புரிவீர்கள்.

**மகரம்**: தொழில் ரீதியாக ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உற்சாகத்தோடு செயற்படும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்**: குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், அரைகுறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்**: விருந்தினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அனுகூலம் தரும் செய்திகள் இல்லம் தேடி வரலாம்.

**கும்பம்**: பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செல்வ நிலை உயரும் நாள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்**: மன நிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி**: கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், குடும்ப நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு**: பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர் சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மீனம்**: வழிபாடு ஆனந்தம் தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

அறிவைத்தந்தன் தாய் தான் அடைக்கலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போகத்தில் அறுவடையான நெல் இதுவரை விற்பனை செய்யப்படவில்லை

## விவசாயிகள் ஆதங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்கின்ற நிலையில் ஏற்கனவே அறுவடை செய்யப்பட்ட நெல்லினை தாம் விற்பனை செய்ய முடியாத நிலையிலுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தினால் நூறு ரூபாய்க்கு நெல் கொள்வனவு செய்வதாக கூறிய போதிலும். கூறிய விலைக்கு நெல்லினை கொள்வனவு செய்வதில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

இந் நிலையில் சிறுபோகம் மேற்கொள்கின்ற நிலையில் பெரும்போக நெல்லினை களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதால் உற்பத்திக்கேற்ற நியாயமான விலையினை அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4)

# மாடுகளை திருடமுயன்ற இருவர் நையப்புடைப்பு

(வவுனியா)

வவுனியா சமயபுரம் கிராமத்தில் மாடுகளை திருட முயன்ற இரு நபர்களை மடக்கிப்பிடித்த பொது மக்கள் குறித்த இரு நபர்களையும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைத்தனர்.

நேற்று காலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

சமயபுரம் விநாயகர் வித்தியாலய வீதியில் மாட்டினை களவாட முயன்ற இரு நபர்களை பொது மக்கள் நையப்புடைத்து, வாகனத்தில் ஏற்றி வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைத்தனர்.

இவ்விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

எமது கிராமத்தில் கால் நடைகள் களவாடப்படுகின்றமை தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளமையுடன், இரவில் நிம்மதியாக உறங்குவதற்கு கூட முடியவில்லை.

பல தடவைகள் கால் நடைகளை களவாடுபவர்களை பிடித்துக் கொடுத்தும் நெளுக்குளம் பொலிஸார் எவ்வித நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை என்பதனால் நாங்கள் திருடர்களை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளோம் என தெரிவித்தனர். (4-250)

# வவுனியாவில் கிராமப்புற

## மாணவர்களுக்கு போக்குவரத்து வசதி



(நெளுக்குளம்)

வவுனியா சின்னத்தம்பனை, மடுக்குளம், வேலன்குளம், கந்தன்குளம், புலவநாவூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கான சீரான போக்குவரத்து வசதி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமங்களுக்கான போக்குவரத்து வசதி இன்மையால் சரியான நேரத்திற்கு மாணவர்கள் பாடசாலை செல்வதில்லை எனவும் பூவரசங்குளம் பாடசாலை அதிபரும், குறித்த கிராம மக்களும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பி னருமான கு.திலீபனிடம் தெரிவித்ததையடுத்தே போக்குவரத்திற்கான தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரச்சினையை இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகளிடம் தெரிவித்து நேற்று குறித்த கிராமங்களுக்கான போக்குவரத்து சேவையினை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திலீபன், வவுனியாசாலை முகாமையாளர் உளுக்குளம், வடபிராந்திய பாதுகாப்பு முகாமையாளர் சுரேந்தர், வட்டார செயலாளர் தோழர் சிவா, இணைப்பாளர் நிரோஸ்ராஜ், சுதர்சன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்துவைத்தனர்.(4-299)

# விவசாயி ஒருவரின் தென்னைகள் எரித்தழிப்பு

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி மயில்வாகன புரம் பகுதியில் தோட்டக் காணி ஒன்றில் நடு ஒகை செய்யப் ப்ட் டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் விசமிகளால் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மயில் வாகனபுரம் கிராமத்தில் உள்ள தோட்டக் காணியொன்றில் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த நூற்றுக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் விஷமிகளால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக பகுதி கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 150 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 450 |
| தக்காளி | 260 | 280 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 250 |
| கோவா | 450 | 360 | 300 | 400 |
| கரட் | 360 | 400 | 400 | 450 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 150 | 200 | 180 | 300 |
| வாழைக்காய் | 120 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 450 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 240 | 180 | 140 | 320 |
| கருணைக் கிழங்கு | 140 | 220 | 200 | 200 |
| பயற்றங்காய் | 450 | 300 | 400 | 320 |
| லீக்ஸ் | 360 | 360 | 400 | 450 |
| பீற்றூட் | 420 | 500 | 450 | 600 |
| கறிமிளகாய் | 400 | 400 | 450 | 450 |
| முருங்கைக்காய் | 1200 | 1600 | 1500 | 2000 |
| போஞ்சி | 550 | 450 | 550 | 500 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 120 | 200 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 80 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 90 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 500 | 700 |
| முள்ளங்கி | 150 | 200 | 160 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 50 |
| ஈரப்பலா | 150 | 200 | 200 | 200 |

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர் - நவகிரி பாடசாலைக்கு அருகில் வைத்து ஒருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

27 வயதுடைய ஆண் ஒருவர் 6950 மில்லிக் கிராம் கஞ்சாவை எடுத்துச் சென்ற போது இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-104)


## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தை அலுவலக வேலைநாட்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா20/-ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் "தலைவர். யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்" என்ற முகவரிக்கு 27.06.2023 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நேரிலோ அல்லது பதிவுத்பால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

(1) பதவி : விற்பனைஉதவியாளர் (நிரந்தரம்)
சம்பள குறி இல:308/15
சம்பளத்திட்டம்: 02/2022 இன் படி 17435-145X10-160X10-20485

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

(அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் / எரிபொருள் நிரப்புநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

(2) பதவி: தொழிலாளி (நிரந்தரம்)
சம்பள குறி இல:318/17
சம்பளத்திட்டம்: 02/2022இன் படி 16515-130X10-145X10-19265

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(3) பதவி : தொழிலாளி-பால்பொருள்உற்பத்திப்பகுதி (நிரந்தரம்)
சம்பள குறி இல:318/16
சம்பளத்திட்டம்: 02/2022இன் படி 16975-135X10-150X10-19825

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

(அ) பத்தாம் வகுப்பு வரை தல்வி கற்றிருப்பதுடன் பால் உற்பத்திகள் சம்பந்தமான துறையில் ஒரு வருட கால அனுபவமும் நல்ல தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(4) பதவி: மொத்த களஞ்சிய தொழிலாளி (நிரந்தரம்)
சம்பள குறி இல:316/15
சம்பளத்திட்டம்: 02/2022இன் படி 17435-145X10-160X10-20485

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

(அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். அல்லது

(ஆ) 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

பொதுவான நிபந்தனைகள்.

1. வயது 27.06.2023 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கல்வித் தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. மேற்படி பதவிகளுக்கு தாங்கள் தெரிவு செய்யப்படுமிடத்து கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டப் பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
5. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
6. சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
7. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புகளும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

13.06.2023 (சி-6724) தலைவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 203



"ஏன் மாட்டார்கள்? அடியே, வானதி! குடந்தை ஜோதிடர் வீட்டிலும் அரிசிலாற்றங்கரையிலும் நாம் ஒரு வாலிப வீரனைப் பார்த்தோமே, ஞாபகம் இருக்கிறதா?" "இருக்கிறது அதற்கு என்ன?"

"நம்மையெல்லாம் கண்டதும் அவன் எப்படிப் போதை கொண்டவன் போல் மயங்கி நின்றான் என்பது ஞாபகம் இருக்கிறதா?"

"அதுவும் ஞாபகம் இருக்கிறது ஆனால் நம்மையெல்லாம் பார்த்து விட்டு என்று தாங்கள் சொல்லுவதுதான் தவறு. அவன் தங்களைப் பார்த்து விட்டுத்தான் அப்படி மயங்கி நின்றான். பக்கத்தில் நின்றவர்களை அவன் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை, அக்கா!"

"வானதி! நல்ல பொய் சொல்கிறாய்! பரிகாசம் செய்கிறாயா என்ன?"

"இல்லவே இல்லை! நான் ஒன்று கேட்கிறேன் அதற்கு உண்மையாக விடை சொல்கிறீர்களா?"

"கேட்டுப் பாரேன்!"

"அந்த வாலிப வீரனுடைய ஞாபகம் உங்களுக்கு இப்போது ஏன் வந்தது?"

"நல்ல வாயாடியாகப் போய் விட்டாய் நீ! அவனுடைய ஞாபகம் வந்ததில் என்ன தவறு?"

"தவறு என்று யார் சொன்னது? நான் சொல்ல வில்லையே? அது மிகவும் இயற்கைதான்! எனக்குக் கூட, அந்த வாலிபனுடைய கதி அப்புறம் என்னவாயிற்றோ என்று கவலைதான்."

"உனக்கு ஏன் அதைப் பற்றிக் கவலை உண்டாக வேண்டும்?"

"ஏன் கவலைப்படக் கூடாது? ஒருவரை நாம் பார்த்திருந்தால், அவரைப் பற்றிய ஞாபகம் நமக்கு அடிக்கடி வந்தால், அவர் என்ன ஆனார் என்று தெரிந்து கொள்ள விரும்புவது இயற்கை அல்லவா!"

"நல்ல இயற்கை! அப்படியெல்லாம் மனம் சிதறுவதற்கு நாம் இடம் கொடுத்து விடக் கூடாது. மனத்தைக் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும். அதோ கேளடி, வானதி அது என்ன பறைச் சத்தம்? அந்தக் குரல் என்ன சொல்லுகிறது? சற்றுக் கவனமாகக் கேள், பார்க்கலாம்!"

ஆம் தூரத்தில் எங்கேயோ வீதியில் பறை கொட்டும் சப்தமும், நடு நடுவே மனிதக் குரல் கூச்சலிடும் சப்தமும் கேட்டது.காது கொடுத்துக் கவனமாகக் கேட்டபோது, மனிதக் குரல் கூறியது இது என்று தெரிந்தது.

"சத்துரு நாட்டிலிருந்து வந்த ஒற்றன் ஒருவன் தஞ்சாவூர்க் கோட்டையில் பொய் முத்திரையைக் காட்டிப் புகுந்து உளவு அறிந்து கொண்டு ஓடி விட்டான். இரண்டு பேரை மரண காயப்படுத்தி விட்டுத் தப்பிப் போய்விட்டான். வாலிபப் பிராயத்தினன். வாட்டசாட்டமான தேகம் உடையவன். இந்திரஜித்தைப் போன்ற மாய தந்திரக்காரன். பெயர் வல்லவரையன் வந்தியத்தேவன். அவனுக்கு அடைக்கலம் கொடுப்போருக்கு மரணதண்டனை விதிக்கப்படும். அவனைப் பிடித்துக் கொடுப்போருக்கு ஆயிரம் பொன் பரிசு அளிக்கப்படும். தஞ்சைக் கோட்டைத் தளபதி பழுவேட்டரையர் காலாந்தககண்டரின் கண்டிப்பான கட்டளை!"

இவ்விதம் மனிதக் குரல் கூறி முடித்ததும் பறை, 'தம், தம், தடதடதம்' என்று முழங்கியது. குந்தவை தேவியின் திருமேனி ஏனோ நடுங்கியது.

அச்சமயம் தாதி ஒருத்தி வந்து, "தேவி! ஆழ்வார்க்கடியார் என்னும் வீர வைஷ்ணவர் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார். ஏதோ அவசர காரியமாம்!" என்றாள்.

"இதோ வந்துவிட்டேன்!" என்று சொல்லிவிட்டுக் குந்தவை, கொடி ஊஞ்சலிலிருந்து இறங்கிச் சென்றாள்.

## நாற்பத்தாறாம் ஆம் அத்தியாயம்
## மக்களின் முணுமுணுப்பு

சோழகுல மூதாட்டியின் சந்நிதியிலிருந்து ஆழ்வார்க்கடியான் இளையபிராட்டியின் மாளிகைக்குப் புறப்பட்டுச் சென்றான். வழியில் பழையாறை வீதிகளில் கண்ட காட்சிகள் அவனுக்கு மிக்க உற்சாகத்தை அளித்தன. கண்ணன் பிறந்த திருநாளை இந்த ஜனங்கள் எவ்வளவு குதூகலமாகக் கொண்டாடுகிறார்கள்?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மந்திர பொம்மை

சோலைவனம் கிராமத்தில் வசித்த ரவி, கடின உழைப்பாளி. அருகில் உள்ள வயல்களில் வேலை செய்து சம்பாதித்து வந்தார். யாருக்கு என்ன உதவி என்றாலும் ஓடி வந்து உதவி செய்வார். தன்னுடைய வருமானத்தில் ஒரு பகுதியை, இல்லாதவர்களுக்குக் கொடுத்துவிடுவார்.

ரவியைப் பற்றிக் கேள்விப்பட்ட துறவி ஒருவர் சோலைவனம் கிராமத்துக்கு வந்தார். அவரைச் சந்திக்க ஏராள மானவர்கள் வந்தனர். ஆனால், ரவி மட்டும் வரவில்லை. தான தர்மம் செய்யக்கூடிய ரவி ஏன் தன்னை வந்து சந்திக்கவில்லை என்று துறவிக்குக் குழப்பமாக இருந்தது.



மூன்றாவது நாள் மாலை, துறவியைப் பார்க்க வேகமாக ஓடிவந்தார் ரவி. "துறவியாரே, தாமதமாக வந்து உங்களைச் சந்தித்ததற்கு என்னை மன்னிக்க வேண்டும். மூன்று நாட்களாக அறுவடை. மூச்சுவிடக் கூட நேரம் இல்லை. மாலையில் வடக்கு வீதியில் ஒரு பெரியவர் நோய் வாய்ப்பட்டிருந்தார்.

அவரைக் கவனிக்க யாரும் இல்லை என்பதால், அங்கு சென்று விட்டேன். இன்றுதான் அவர் குணமானார். உங்களைக் காண நேரம் [illegible] வீட்டில் [illegible]ருந்த வேண்டும்" என்று அன்புடன் கூறினார் ரவி.

"நானே உன்னைச் சந்திக்க விரும்பினேன். இன்று நீயே வந்துவிட்டாய். வேலைதான் முக்கியம். உழைப்புதான் உயர்வைத் தரும். அதே போல் ஒரு பெரியவரைக் கவனித்ததும் முக்கியமான விஷயம். இரவு உன் வீட்டில் தங்குகிறேன்" என்றார் துறவி.

ரவி மகிழ்ச்சியுடன் வீட்டுக்குச் சென்றார். சற்று நேரத்தில் துறவியும் வந்தார். அவரை நன்கு உபசரித்து, தேவையான அனைத்தையும் செய்துகொடுத்தார் ரவி. துறவியின் மனம் மகிழ்ந்தது. ஊரைச் விட்டுச் செல்லும் அன்று, ஒரு மந்திர பொம்மையை ரவியிடம் கொடுத்தார்.

"ரவி, தினமும் ஒரு முறை இதை வணங்கி, மாதம் ஒருமுறை என் கையில் உள்ள மண்ணைப் பொன்னாக மாற்று என்று சொன்னால், 3 தங்க நாணயங்கள் கிடைக்கும். இதை உன் உழைப்புக்குப் பரிசாகத் தருகிறேன். பெற்றுக்கொள். மகிழ்ச்சியாகவும் பிறருக்கு உதவி செய்தும் வாழ்க்கையை நடத்து" என்றார் துறவி.

நன்றி சொல்லி, பொம்மையை வாங்கிக் கொண்டார் ரவி. தினமும் அந்தப் பொம்மையை வணங்கினார். ஒரு மாதத்துக்குப் பிறகு, துறவி சொன்னதைப் பரிசோதனை செய்து பார்க்க நினைத்தார். "மந்திர பொம்மையே, என் கையில் உள்ள மண்ணைப் பொன் னாக்கு" என்று சொல்லி முடித்ததும், மூன்று தங்க நாணயங்கள் வந்தன. ரவியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளும்
– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# அரசின் வரித்திருத்தத்திற்கு எதிராக மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசின் அண்மைய வரித்திருத்தத்திற்கு எதிராக மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA ) எச்சரித்துள்ளது.

தொழில் வல்லுனர்களுக்கு சுமையாக உள்ள அண்மைய வரிஅதிகரிப்பை திருத்தும்திட்டத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என சங்கத்தின் ஊடகப்பேச்சாளர்வைத்தியர்சமில்விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஒரு தீர்மானத்திற்கு வந்து அதன் திட்டத்தை வாரத்திற்குள் அறிவிக்கத் தவறினால், ஏனைய நிபுணர்களின் ஆதரவுடன் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

GMOA மற்றும் தொழில் வல்லுநர்கள் எவ்வாறு திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பது குறித்து ஏற்கனவே அதிகாரிகளுக்கு தங்கள் முன்மொழிவுகளை வழங்கியுள்ளனர். வரி தொடர்பான தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை தவிர வேறு வழியில்லை என மேலும் எச்சரித்துள்ளார். (ம-7)

# பனை வளத்தைப் பயன்படுத்தாமல் அபிவிருத்தி செய்யும் உபாயம்

பனை வளம் எமது மிகப்பெரும் சொத்து. ஒரு காலத்தில் நம் உணவுப் பொருளாதாரத்தில் பனை ஆற்றிய வகிபங்கை ஒருபோதும் மறந்துவிட முடியாது.

ஒடியல் பிட்டு, ஒடியல் கூழ், பனாட்டு, புளுக்கொடியல், பதநீர் என எங்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்த பனைகள் எங்கள் வாழ்வியலோடு இரண்டறக் கலந்திருந்தன.

ஆம், அந்தக் காலத்தில் பனை மரங்களால் கட்டப்பட்ட வீடுகள் பனை ஓலையால் வேயப்பட்டபோது, அதன் குளிர்மையை இன்றைய குளிரூட்டல் சாதனங்களால்கூட ஈடு செய்ய முடியாது.

இதைவிட, பந்தி இருத்தி விருந்தோம்பல் செய்வதற்குப் பந்திப் பாயும் அருவி வெட்டி சூடடிப்பதற்குக் களப்பாயும் உறங்குவதற்கு சாயம் காய்ச்சி இழைத்த குருத்தோலைப் பாயும் புகையிலைச் சிப்பம் கட்டுவதற்கு ஓலைப் பாயும் என்ற எம் வாழ்வியல் இன்று எங்குற்றன என்பது தெரியவில்லை.

உறிகட்டி உணவுப் பொருட்களை அடுக்கி வைத்த அந்த வாழ்வியல் அடையாளத்தை இன்று எங்கு தேடினும் கிடைக்கப்பெறா.

இருந்தும் அப்போது பனைகளைப் பாதுகாப்பதற்கு எந்தச் சபையும் இருக்கவில்லை.

ஒவ்வொருவரும் தாமே பனை வளத்தைப் பாதுகாத்தனர்.

முதுபனைகளைத் தறித்து வீடு கட்டுவதற்குப் பயன்படுத்தினர். பனை மரங்களால் அமையப்பெற்ற கூரைகள் சுமார் 300 வருடங்களைக் கடந்தும் எந்தப் பழுதுமின்றி இன்னமும் வைரமாய் நிமிர்ந்து நிற்கின்றன.

இருந்தும் சமகாலத்தில் பனைவளம் பாதுகாப்போம் என்ற பேரில் நிறுவனங்களும் அவற்றுக்கான சட்டங்களும் எழுந்தனவாயினும் பனைவளத்தால் எந்தப் பயனையும் மக்கள் அனுபவிக்காமல் தவிர்த்து வருவதுதான் வேதனைக்குரியது.

உண்மை. விழுந்த பனம் விதையெல்லாம் வடலியாய் முளைத்து வாழ்விடங்களை அச்சமுறும் இடங்களாக ஆக்கிவிட்டன.

பனம் பண்டங்களைத் தயாரிப்பதில் எவரும் ஆர்வம் காட்டவில்லை. சுருங்கக்கூறின் பனை வளத்தைப் பாதுகாப்போம் என்று புறப்பட்டவர்கள் பனை தறிப்பதற்கு அனுமதி பெறவேண்டும் என்ற நிபந்தனையை விதித்து ஆட்களை அலைய வைத்ததைத் தவிர வேறு எதையும் சாதிக்கவில்லை.

உண்மை. எங்கள் மண்ணின் பெருவளம் பனை வளம் என்றால், ஒரு கிலோ பனங்கட்டி இரண்டாயிரம் ரூபாயுக்கு விற்கப்படுவதன் மாயம்தான் என்ன?

சிலவேளை பனங்கட்டி இறக்குமதிப் பொருளாக இருந்திருந்தால்கூட இந்த விலைக்குப் போகாது என்று அடித்துக் கூறலாம்.

ஆக, சபைகள் அமைத்து இருந்ததையும் கெடுத்தவர்கள், தமிழர்களின் பனை மரத்து வீட்டுக்கூரைக்கும் முடிவு க்ட்டிவிட்டனர்.

அதோ! முதுபனைகள் தறிப்பார் இன்றி தலை இழந்து நிற்கின்றன.

ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்த பனைகளைத் த்றித்து அவற்றை வீட்டுக் கூரைக்குப் பயன்படுத்தலாம் என்று கூறியிருந்தால் எத்தனையோ பனைகள் உக்காமல் நம்மவர் வீடுகளின் கூரைகளில் இருந்திருக்கும்.

என்ன செய்வது இன்னும் ஏகப்பட்ட முதுபனைகள் தலை இழந்து உயிர்விடத் தயாராகிவிட்டன.

ஆம், பனை வளத்தை அனுபவிக்கவிடாமல் பனை வளத்தை அபிவிருத்தி செய்வோம் என்ற கோசம் இருக்கும்வரை பனையால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

# கொழும்பில் வெடிகுண்டு மீட்பு

வெள்ளவத்தை கிருலப்பனை பகுதியில் கைக்குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவென்யூ வீதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றின் சுவரில் பொருத்தப்பட்டிருந்த சீமெந்துப் பானை ஒன்றில் இருந்து இக் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த கைக்குண்டு இன்று பிற்பகல் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய இக்கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. (ம-7)

# பேருந்திலிருந்து விழுந்த இளைஞன் படுகாயம்

பலாலி வீதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துடன் போட்டி போட்டு ஓடிய தனியார் பேருந்திலிருந்து தவறி விழுந்த இளைஞனொருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, குறித்த வீதியில் பயணித்து கொண்டிருந்த அரச பேருந்தினை தனியார் பேருந்து முந்தி செல்வதற்கு முற்பட்ட வேளையிலே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தனியார் பேருந்தின் வேகம் காரணமாக பேருந்தில் பயணித்த இளைஞர் தவறுதலாக கீழே விழுந்தமையால் படுகாயமடைந்துள்ளார். இதையடுத்து பொதுமக்கள் அவரை மீட்டு சிகிச்சைகளிற்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதற்கு முன்னரும் இவ்வாறான போட்டி ஓட்டத்தால் பாடசாலை மாணவ்ர் ஒருவர் உயிரிழந்து அது பாரிய அதிர்வலைகளை தோற்றுவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பாடசாலை மாணவன் சடலமாக மீட்பு

(பொகவந்தலாவ)

பத்து வயதான மாணவன் ஒருவன் தன்னுடைய வீட்டின் மலசல கூடத்துக்குள் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் பொகவந்தலாவை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போதே மலசல கூடத்துக்குள் சென்று இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

மரணமடைந்த மாணவனின் பூதவுடல், டிக்கோயா - கிளாங்கன் வைத்தியசாலையில், பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் நீதவான் ஸ்தல பரிசோதனைக்குப் பின்னர் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# தனிமையில் இருந்த பெண் படுகொலை

(காலி)

காலி, கொஸ்கொட பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் ஒன்று நேற்று காலை வீட்டின் முன் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுருவ எட்டவலவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய கொஸ்கொட படல்கே சாந்தனி என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்றுக் காலை இந்த பெண் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் மகள் அம்பலாங்கொட நகரிலுள்ள பிரதான பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருவதாகவும் நேற்றுக் காலை மகள் பாடசாலைக்கு சென்ற பின்னர் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் வெளிநாட்டில் பணிபுரியும் நிலையில் கொலைக்கான காரணத்தை அறிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொலைச் சம்பவம் தொடர்பான நீதவான் விசாரணை இன்று நடைபெறவுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ம-7)

# வேலணை பிரதேச சபை உள்ளூராட்சி விழா

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி விழா 2022 இன்று பிற்பகல் 2 மணிக்கு வேலணை சரஸ்வதி மகா வித்தியாலய மண்டபத்தில் வேலணை பிரதேச சபை செயலாளர் தி. தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.ஶ்ரீ வர்ணன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக தீவகம் தெற்கு வேலணை உதவி பிரதேச செயலாளர் க. பார்த்தீபன், வேலணை மின் பாவனையாளர் சேவை நிலைய மின் அத்தியட்சகர் ம. அரவிந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (4)

# அச்சுவேலியில் கசிப்பு கோடாவுடன் இருவர் கைது

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர் வாதரவத்தை பகுதியில் வைத்து 360 லீற்றர் கோடாவுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், அச்சு வேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீரவாணி சந்திப் பகுதியில் வைத்து 4 1/2 லீற்றர் கசிப்புடன் 37 வயதுடைய ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கசிப்பினை எடுத்துச் செல்லும் போது இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இரண்டு கைது நடவடிக்கைகளும் காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், மகாறம்பைக்குளம், சமயபுரம், அழகல்ல( தீருவேகம), அளுத்தகம, கல்குண்டாமடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- I

28

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



காரணம் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் கான்கிரீட் தூண்கள் அமைத்து நடுக்கடலில் செயற்கை பவளப் பாறைகள் உருவாக்கப்பட்டு வருகின் றன.கடலில் இறக்கும் இந்த பழைய பேருந்துகள் கடல் சீற்றம் மற்றும் கடல் நீரோட்டம் காரணமாக இந்திய எல் லைக்குள் போகாமல் இருக்க பேருந் தின் நான்கு புறமும் கான்கிரீட் போட்டு உறுதியாக கடலில் நிறுத்தப்பட்டு வருகின்றன.இலங்கை மீன்வளத் துறை இந்த திட்டத்தை இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மட்டுமே செய்து வருகிறது.

இலங்கை மீன்வளத்துறையால் கடலில் போடப்படும் இந்த பேருந்துகள் செயற்கை பவளப்பாறையாக மாறி அதன்மூலம் கிடைக்கும் மீன்கள் நிச்சயம் இலங்கை கடற்பரப்பில் இரு ந்து இந்திய கடற்பரப்பிற்குள் செல்லும் என்பதால் இந்திய மீனவர்களுக்கும் நல்ல பயன்கிடைக்கும்.

இந்த திட்டத்தால் இந்திய மீனவர் களின் மீன்பிடி தொழில் நிச்சயம் பாதிக்கப்படாது. இலங்கை கடற்பர ப்பில் உருவாகும் மீன்களுக்கு இந்திய கடல் இலங்கை கடல் என பிரித்து பார்க்கத் தெரியாது எனவே மீன்கள் இந்திய கடலுக்குள் செல்ல அதிக வாய்ப்புண்டு.

தமிழ் நாட்டுக் கடற்பரப்பில் உள்ள வளங்களை தமிழ்நாடு மீனவர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடிமுறை மற்றும் அதிக குதிரை திறன் கொண்ட என்ஜின்களை பயன்படுத்தி மீன்பிடி த்து அழித்துள்ளனர்.

இந்திய கடற்பரப்பில் மீன் பிடிக்கும் தமிழ்நாடு மீனவர்களுக்கு எது தங் களது எல்லை என்பது நிச்சயம் தெரி யும். அதன் அடிப்படையில் மீனவர்கள் மீன்பிடி தொழில் செய்தால் நிச்சயம் இலங்கை இந்தியமீனவர்கள் இடையே பிரச்சனை இல்லாமல் மீன்பிடிக்க முடியும் என்கிறார் டக்ளஸ்தேவானந்தா.

### இருநாட்டு மீனவர்களின் நீண்ட நாள்பிரச்சனைக்கு தீர்வு

தொடர்ந்து பேசிய இலங்கை மீன் வளத்துறை அமைச்சர் டக்ளஸ்தேவா னந்தா "இந்திய பிரதமர் நரேந் திரமோடி அழைப்பை ஏற்று கடந்த 2019ஆம் ஆண்டு இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் டெல்லி சென்றிருந்தோம்.

அப்போது இந்திய இலங்கை மீன வர்கள் பிரச்சினைநீண்ட ஆண்டு பிரச்சனையாக இருந்து வருகிறது. இதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக் கோடு இந்திய மீன் ஆராய்ச்சி நிலை யம், தமிழ் நாடு மீன் வளத்துறை, தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம், இலங்கை மீன்வளத்துறை, இல ங்கை கடல்வள ஆராய்ச்சி நிலையம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் போன் றவற்றில் உள்ள வல்லுநர்களை கொண்டு இலங்கை கடல்வளத்தை எப்படி பாதுகாப்பது, கடல்வளங்களை எப்படி ஊக்கப்படுத்தலாம் என்பது குறித்து அறிக்கையாக தயார் செய்து நான் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர்ஆகியோரிடம் கொடுத்திருந்தேன்.

இந்திய அரசு இது ஒரு அற்புதமான திட்டம் என்றும் இது குறித்து கலந்து ஆலோசித்து நல்ல முடிவு எடுக்கப்படும் என அறிவித்திருந்த நிலையில் கொரோனா பெருந் தொற்று காரண மாக அறிக்கை குறித்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்க முடிய வில்லை" என்கிறார் டக்ளஸ் தேவானந்தா.

### பேருந்துகளை கடலில் இறக்குவதற்கு இலங்கை மீனவர்கள் ஆதரவு

இத்திட்டம் குறித்து யாழ்பாணம் மீனவ சங்க தலைவர் அன்னராசா பி.பி.சி தமிழிடம் பேசுகையில், இல ங்கை அரசாங்கமும் மீன்வளத் துறை அமைச்சரும் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், மீன்வளத் தையும் அதிகரிக்கும் நோக்கோடு பல்வேறு கட்ட ஆய்வுகள் நடத்தி, நீண்டகால முயற்சியாக இலங்கை வடக்கு மீனவ அமைப்புகளின் கோரி க்கையை ஏற்று தற்போது யாழ்ப் பாண மாவட்டம் காங்கேசன்துறை மற்றும் நெடுந்தீவு கடற்பரப்பு பகுதியில் பேருந்துகளை இறக்கி வருகின்றனர்.

இலங்கை கடல் எல்லைக்குள், இலங்கை மீனவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் எங்களுடைய கடல்வளத்தைப் பாதுகாத்து மீன்வ ளத்தை அதிகரிக்கும் நோக்கோடு பேருந்துகள் கடலுக்குள் போடப்பட்டு வருகின்றன.

இலங்கை மீன்வளத்துறை அமை ச்சகம் எடுத்த நடவடிக்கையை யாழ்ப் பாணம் மாவட்ட மீனவ சமுதாயமும், மீனவ சங்கங்களும் வர வேற்றுள் ளன. ஆனால் இந்தியாவில் உள்ள தமிழ் நாடு மீனவர்கள் சிலர் இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற னர் இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.இந்திய கடற்பரப்பில் இது போன்ற பழைய இரும்புகள் கடலுக்குள் போடப்பட்டு செயற்கை பவள பாறைகள் ஏற்படுத்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதனை அறியாதவர்கள் இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இலங்கை உள்நாட்டுப் போர் முடி வுக்கு வந்த பின் இந்திய மீனவர்கள் அத்து மீறி இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து பவளப் பாறைகளையும், கடல் வளங்களையும் அழித்து வரு வதாக குற்றம் சாட்டுகிறார் யாழ் பாணம் மீனவர் சங்க தலைவர் அன்னராசா.

### இந்திய மீனவர்களுக்கு கண்டனம்

தொடர்ந்து பேசிய அன்னராசா, "இலங்கை வடக்கு மாகாண மீனவர்களின் கோரிக்கையை ஏற்று இலங்கை அரசு இலங்கை கடலில் தொடர்ந்து பேருந்துகளை போடுவதற்கான ஏற் பாடு செய்ய வேண்டும். இதுபோன்று நெடுந்தீவு, கச்சத்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவிலும் பேருந் துகள்போடப்படுவதை நாங்கள் வர வேற்கிறோம்.தமிழ்நாட்டில் இத்திட்ட த்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்திய மீனவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருவதாக செய்தி வாயிலாக அறிந் தோம். இவ்வாறான செயற்பாடுகளை இந்திய மீனவர்கள் நிறுத்தி கொள்ள வேண்டும். இல்லை யேல் அதற்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட மீன வர்கள் போராடும்.சூழல் உருவாகும்" என்கிறார் யாழ்ப்பாணம் மீனவ சங்க தலைவர் அன்னராசா.

### மீனவர்களுக்கு நன்மையை விட தீமையே அதிகம்

பேருந்துகள் கடலில் போடப்படு வதால் நாளடைவில் எவ்வாறான பிரச்சனைகள் வரக்கூடும் என இலங்கையை சேர்ந்த ஓய்வு பெற்ற கடல் சார் பேராசிரியர் சூசை ஆனந் தன் பி.பி.சி தமிழிடம் பேசுகையில், கைவிடப்பட்ட பேருந்துகளை கடலில் இறக்குவதால் உள்ளூர் மீனவர்களின் படுப்பு வலைதொழில் முழுமையாக பாதிக்கப்படுவதுடன் இயற்கை சீற்றம் ஏற்படும் காலத்தில் நடுக்கடலில் மீன் பிடித்து கொண்டிருக்கும் மீன்பிடி படகுகள் கவிழ்ந்தால் படகில் உள்ள மீனவர்கள் உயிரிழக்க நேரிடும். கைவி டப்பட்ட பேருந்து கூடுகள் எடை குறைந் தவை என்பதால் கடல் நீரோட்டத்திற்கு ஏற்ப இடத்திற்கு இடம்நகரும். இதனால் மீனவர்களுக்கு ஏற்படும் நன்மையை விட தீமையே அதிகம்.

மேலும், பேருந்து கூடுகள் இறக் கும் இடத்திற்கருகில் நண்டு வலை, சுறாவலை, திருக்கைவலை, கும்ளா வலை, போன்றவற்றை பயன்படுத்த முடியாது. இதனால் மீன்பிடிதொழில் பாதிக்கப்படும். அதேநேரம் இலங்கை யில் இறுதி கட்டபோரின் போது மன்னாரில் சாகரவர்த்தனா கப்பல் மூழ்கடிக்கப்பட்ட பகுதியில் மீன் உற்பத்தி நன்றாக உள்ளது என் கிறார் சூசை ஆனந்தன்.

### மீன்பிடி தொழில் அழியும் அபாயம்

இது குறித்து ராமேஸ்வரம் மீனவ சங்க தலைவர் ஜேசுராஜா பிபிசி தமி ழிடம் பேசுகையில், ராமேஸ்வரம், மண்டபம், புதுக்கோட்டை, நாகப்பட்டி னம், காரைக்கால் பகுதிகளை சேர் ந்த மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் போது மீனவர்கள் விரிக்கும் வலைகள் காற்றின் வேகம் காரண மாக கச்சதீவு வரை செல்லக் கூடும் அவ்வாறு செல்லும் மீன்பிடி வலைகள் இந்த பேருந்துகளில் சிக்கி கிழிந்து மீனவர்கள் வலைகளை இழக்கும் சூழ்நிலை ஏற்படும்.

இதனால் படகு ஒன்றுக்கு 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்படும். இந்த நிலை நீடித்தால் இந்திய மீனவர்கள் தங்கள் பாரம்பரிய இடத்தில் மீன்பிடிக்க முடியா மல் மீன்பிடி தொழிலை கைவிட்டு விட்டு மாற்று தொழில் தேடி அண்டை மாவட்டங்களுக்கு செல்ல நேரிடும். இதனால் காலப் போக்கில் மீன்பிடி அழியும் சூழல் ஏற்படும்.

எனவே இலங்கை மீன்வளத் துறை இந்திய மீனவர்களின் மீன்பிடி தொழிலை அழிக்கும் நோக்கில் ரகசியமாக திட்டமிட்டு இலங்கை கடற்படையின் உதவியுடன் இந்த திட்டத்தை செயற்படுத்தி வருகிறது.

இந்திய அரசு மீன் உற்பத்தியை அதிகரிக்க கான்கிரீட்டால் ஆன செயற்கை பவளப் பாறைகளை உருவாக்கி கடலில் போட்டு வரு கிறது. அதேபோல் இலங்கை அர சும் கைவிடப்பட்ட பேருந்துகளை பழைய இரும்பு விலைக்கு விற்று அதில்வரும் பணத்தில் செயற்கை பவளப்பாறைகள் அமைத்து கடல்வாழ் உயிரினங்களின் எண்ணிக் கையை உயர்த்தலாம்.

இலங்கை அரசு அதை செய் யாமல் உலக நாடுகளில் எங்கும் செய்யாத ஒரு செயலை செய்து வருகிறது. தமிழ் நாட்டில் மீன்பிடி த்தடை காலம் முடிவடைந்து மீனவ ர்கள் மீன்பிடிக்க செல்லும் நிலை யில் இலங்கை அரசு திட்டமிட்டே இந்திய மீனவர்களின் மீன்பிடி தொழிலை அழிக்கும் நோக்கில் செயற்பட்டு வருகிறது என்கிறார் ஜேசுராஜா.

### கடலில்போடும் பேருந்தால்கடல்மாசுபாடு

இலங்கை கடற்பரப்பில் போட ப்படும் பேருந்துகளால் இந்திய கடற்பரப்பில் உள்ள மீன்வளங்கள் பாதிக்கப்படும் என இந்திய மீனவர் களின்குற்றச்சாட்டு குறித்து மத்திய கடல் மீன்வளஆராய்ச்சி மைய விஞ்ஞானி ஒருவரிடம்கேட்டபோது, ஆரம்ப காலங்களில் செயற்கை பவளப்பாறைகள்அமைக்க நான்கு சக்கர வாகனங்களின் டயர்கள் கடலில் போடப்பட்டுவந்தது. காலப் போக்கில் டயர்களில் உள்ள ரப்பர் களால் கடல்மாசுபடும் என ஆய் வுகளில் தெரிய வந்ததையடுத்து கடலில் போடப்பட்ட டயர்கள திருப்பி எடுக்கப்பட்டன.

பலநாடுகளில் கடலில் செயற்கை பவளப்பாறைகள் அமைக்க கைவி டப்பட்ட வாகனங்களை பயன்படு த்திவருகின்றனர். அதுநல்ல பலனை அளித்துவருகிறது. கடலில் பல ஆண்டுகள் இரும்பு வாகனங்கள் இருப்பதால் அந்தப் பகுதிகளில் கடல்வாழ் உயிரின பெருக்கம் அதிகரித்துள்ளது.

கைவிடப்பட்டபேருந்துகளை கட லில் போடும் போது பேருந்துகளின் மேற்பரப்பில் பாசி பிடித்து நுண் ணுயிர்கள் வளர தொடங்கி அது ஒருநல்ல செயற்கை பவளப் பாறை யாகமாறும். பேருந்தின் மேற்பரப் பில் பாசிகள் வளர்வதால் துருப் பிடித்து கடல் மாசுபட வாய்ப்பில்லை.

அதேபோல் நாளடைவில் பேரு ந்துகள் கடல் நீரோட்டம் காரண மாக உடைந்து வேறு இடத்திற்கு சென்றாலும் அந்தபாகம் நிச்சயம் மற்றொருசெய ற்கை பவளப்பாறை யாகமாறும். எனவே கடல்மாசு படாது என்கிறார்அந்த பெயர் வெளி யிட விரும்பாத இந்திய கடல் ஆரா ய்ச்சிவிஞ்ஞானி. (நன்றி- பிரபுராவ் ஆனந்தன், bbc.com)

முற்றும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இளைஞனின்...

மாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த வினோதன் விபுசனன் (வயது- 21) என்பவராவார்.

குறித்த இளைஞன் காலை தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதை அடுத்து அவர் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு சென்றபோது உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## தொல்பொருள்...

மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில், ஜனாதிபதிக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றிருந்தது.

குறித்த சந்திப்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களின் காணி தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு விகாரை அமைந்துள்ள காணி தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அதுகுறித்து ஜனாதிபதி தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த மனதுங்க, குறித்த விகாரை தற்போது 72 ஏக்கர் காணி பரப்பைக் கொண்டுள்ளது. இதனை தவிர மேலும் 275 ஏக்கர் பரப்பு நிலம் விகாரை சார்பில் கோரப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

எனினும், இதனை மறுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜேதவனாராமய, மஹா விகாரை மற்றும் அபயகிரி விகாரை என்பனவற்றை இணைத்துப்பார்த்தாலும் 100 ஏக்கர் காணியே இருக்கும்.

அவ்வாறெனில் குறித்த விகாரைகளை விடவும் அளவில் முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு விகாரை பெரியதா? எனக் கேள்வி எழுப்பினார்.

அத்துடன், வரலாற்றை நீங்கள் எனக்கு கற்றுத் தருகின்றீர்களா? இல்லை நான் உங்களுக்கு கற்றுத் தர வேண்டுமா? எனவும் ஜனாதிபதி கடுமையாக அவரைச் சாடியிருந்தார்.

இது தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில், நேற்று வெளியாகியிருந்த நிலையில், தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் தமது பதவியில் இருந்து விலகியுள்ளார். (ம-7)

## நடேஸ்வராக்...

சேவையை பயன்படுத்த முடியும்.

யா/நடேஸ்வராக் கல்லூரி மாணவர்களின் நலன்கருதி, நடேஸ்வரா கல்லூரி ஐரோப்பிய பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் தொடர்ச்சியாக பேருந்து சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து மயிலிட்டி நோக்கிப் புறப்படும் 769 தனியார் பஸ் சேவையானது, மாவிட்டபுரம் கீரிமலை வீதி ஊடாக நல்லிணக்கபுரம் சென்று யா/நடேஸ்வராக் கல்லூரி ஊடாகப் பயணிக்கவுள்ளது.

பாடசாலை நாட்களில் இடம்பெறவுள்ள குறித்த போக்குவரத்து சேவை காலையில் 7.10, 7.30 மற்றும் 7.40ற்கும் மதியம் 1.40ற்கு பாடசாலையில் இருந்து நல்லிணக்கபுரம் வரை இடம் பெறும். (ம-7,33)

## மின்சாரக்...

குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு இது தொடர்பான கட்டண திருத்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கட்டணக் குறைப்பின்படி, முதல் 30 யுனிட் வரையிலான கட்டணம் 26.9 சதவீதம் குறைக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், 31 முதல் 60 யுனிட் வரையிலான மின் கட்டணம் 10.8 வீதமும், 61 முதல் 90 யுனிட் வரையிலான மின் கட்டணம் 7.2 வீதமும், 91 முதல் 180 யுனிட் வரையிலான மின் கட்டணம் 3.4 வீதமும் குறைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, 180 மின் அலகுகளுக்கு மேல் உள்ள பிரிவுக்கு 1.3 வீத கட்டணம் குறைக்கப்படும் அதேவேளை மத ஸ்தலங்கள், தொண்டு நிறுவனங்களின் மின்சாரக் கட்டணம் சுமார் 3.2 வீதத்தால் குறைக்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும் தொழிற்சாலைகள், தெருவிளக்குகள் மற்றும் அரச நிறுவனங்களின் கட்டணத்தில் மாற்றம் இருக்காது என்றும் ஹோட்டல்களுக்கான கட்டணம் 12.6 வீதத்தால் குறைக்கப்படும் என்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## தொல்பொருள்...

ஜனாதிபதி செயலகத்தில் காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறிமுறைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று அண்மையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் வடக்கு தமிழ் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். இதன் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்தோடு தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்ளாமல் செயற்படுவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கிறீர்களா? அல்லது நான் உங்களுக்கு வரலாறு கற்பிக்க வேண்டுமென விரும்புகிறீர்களா?" என்று அதிகாரிகளிடம் கடுந்தொனியில் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் 229 ஏக்கர் காணியை விடுப்பதற்கான கடிதத்தை ஜூன் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உறுதியளித்திருந்தார்.

எனினும் இது வரையில் அதற்கான பதில் வழங்கப்படவில்லை என வடக்கு பிரதிநிதிகளால் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த பணிப்பாளர் நாயகம், "எனக்கு அதனை விடுவிப்பதில் பாரிய சிக்கல் காணப்படுகிறது." எனக் குறிப்பிட்டார்.

எனினும் அது அமைச்சரவையின் கொள்கை என்றும், அதனை தொல்பொருள் திணைக்களம் பின்பற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் கடுந்தொனியில் தெரிவித்ததோடு, அடுத்த முறை இவ்வாறு தேசிய கொள்கையை பின்பற்றாமைக்கு காரணங்களை முன்வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்றும் எச்சரித்தார்.

மேலும், விகாரையொன்றை அமைப்பதற்கு 275 ஏக்கர் நிலப் பரப்பை எடுத்தால் அது மகா விகாரையை விடவும் பெரியதாகிவிடும். மகா விகாரை, தியதவனாராமய மற்றும் அபயகிரி உள்ளிட்ட அனைத்து விகாரைகளை இணைத்தால் 100 ஏக்கர் காணப்படும். அவ்வாறெனில் இவற்றை விட பாரிய விகாரையை அமைப்பதற்காகவா நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? என கேள்வியெழுப்பினார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக ஒரு விகாரைக்கு 220 ஏக்கர் நிலப்பரப்பு உரித்துடையதாகக் காணப்படும் என்று நான் நினைக்கவில்லை. விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி இது தொடர்பில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-7)

## மிகச்சிறந்த...

கஸ்தூரி தெரிவித்துள்ளார்

கனடாவில் நடந்த Easy Entertaining Night -2023 நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே நடிகை கஸ்தூரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர் தலைமுறைகளிடமே ஈழப் போராட்டம் கையளிக்கப்பட்டுள்ளது. தலைவர் பிரபாகரனின் கனவை புலம்பெயர் தலைமுறைகள் முன்னெடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

இதேவேளை குறித்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 12/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1598
வெற்றி இலக்கங்கள்
துலாம் 9 3 2 9 3 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1173
N 13 48 61 62
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.12
சீட்டிழுப்பு இலக்கம் 3385
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 21 27 49 78
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 12/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1491
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
D 16 02 04 35 44

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.12
சீட்டிழுப்பு இலக்கம் 452
ரிஷபம் 17 23 38 56 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/12
சீட்டிழுப்பு இலக்கம் 5143
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
T 9 6 9 8 5 7
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2117 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.06.12 தினம் திங்கட்கிழமை
S 10 17 35 52
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 3,766,460/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.12
வெற்றி வாரம்: 4278
வர்ணம்: இளம் நீலம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,004,219.30
வெற்றி இலக்கங்கள் 17 21 42 56 ஆங்கில எழுத்து S
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,563,243.20
திகதி 2023-06-12
வெற்றி வாரம் 3829
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 23 25 30 46
விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,239,540/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 30 49 58 60 64
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1293
பசுமை
2023.06.12 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 337,207,036.20
DLB

ஜயோதா Jayoda
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.12
வெற்றி வாரம்: 1929
வர்ணம்: செம்மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 43,855,486.00
வெற்றி இலக்கங்கள் 12 15 18 21 ஆங்கில எழுத்து G
DLB

அதிர்ஷ்ட கோடீஸ்வரன் ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 1943
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2023.06.12
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 51,964,925.60
வெற்றி இலக்கங்கள் 04 16 22 42 ஆங்கில எழுத்து N
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோடியை சந்திக்க ரணிலுடன் தொண்டமான்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜூலை 21ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளமை உறுதியாகியுள்ளது. ஜனாதிபதியுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானும் இந்தியா செல்கின்றார்.

இந்திய பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் ஜனாதிபதி தலைமையிலான இலங்கை குழுவினர் பேச்சு நடத்தவுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, பாதுகாப்பு மற்றும் கலை, கலாசார உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் இதன்போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

பாரத பிரதமருடனான சந்திப்பின் போது மலையக மக்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிகழ்வு ஒன்றுக்கு இந்திய பிரதிநிதிகளை அழைப்பதற்கான கோரிக்கையும் விடுக்கப்படும் என தெரியவருகின்றது. (ம-7)


## SUBRA(14)

**சித்தன்கேணி**

**A/L 2025 வர்த்தகப் பிரிவு**

ஆரம்பம் : 16.06.2023 வெள்ளி 04.00 Pm

| | |
|---|---|
| பொருளியல் | : S.ஜெயகுமார் |
| கணக்கீடு | : S.தவா |
| வணிகக்கல்வி | : S.K.பாலசபேஷ் |

(15940)

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டில் பல வருட அனுபவத்தைக் கொண்ட ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை வலி. மேற்கில் SUBRA வில் மட்டுமே.

076 420 7927



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15937)

076 825 7716 (ஆகாஸ்)



## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் Lankan Tile Show Room ற்கு கீழ் குறிப்பிட்ட பணியாளர்கள் தேவை

- மனேஜர் Tile Show Room (ஆண்)
  சிங்களம் ஆங்கிலம் தெரிந்தவர்கள்
- பணியாளர்கள் ஆண் 2 பேர்
- விற்பனை முகவர்கள் Tile, cement (ஆண்)

(C-6729)

இம்மாதம் 14, 15 ,16 ம் திகதிகளில் வதிவிடச்சான்றிதழ், குடும்ப அட்டை பிரதி, கல்வித் தகைமை சான்றிதழ், பிறப்பத்தாட்சிப்பத்திரம், அடையாள அட்டை பிரதி மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் சமூகமளிக்கவும்.

**குரு காட்வெயார்**

இல.175 கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.



## K.P.C இருபாலை வீதி, கோண்டாவில்

எம்மிடம் கல்வி கற்று A/L 2021 இல் வர்த்தகப்பிரிவில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டமாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



S.சத்யா - 3A D.R-01 (J/V.G.H.S)
S.சாளினி - 3A D.R-22 (J/K.R.V)
S.ஜனுசன் - 2A, B D.R-28 (J/U.H.C)
M.தமிழினி - 2A,B D.R-29 (J/V.C.C)
J.ஆர்த்தி - 2A,B D.R-53 (J/U.L.C)
P.பிரசாந்தன் - 2A,B D.R-56 (J/K.R.V)
S.சாதனா - 2A,B D.R-64 (J/K.R.V)
V.பூஜா - 2A,B D.R-65 (J/V.C.C)
K.ஜனிஸ்ரன் - A,B,C D.R-117(J/V.C.C)
S.லயசுருதி - 2A,B D.R-123 (J/V.G.H.S)
K.கேதுசா - A,2B D.R-169 (J/K.R.V)
K.கௌதமி - 2A,B D.R-257 (J/J.H.L.C)

பொருளியல் : S.Jeyakumar
வணிகக்கல்வி : T.S.Richi
கணக்கீடு : A.T.Suren

A/L 2025 வர்த்தகப்பிரிவு
ஆரம்பம் 15.06.2023
வியாழக்கிழமை மாலை 3.30
இம்மாதக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(15940)

தொடர்புகளுக்கு : 0777238597



## அமெரிக்க லொத்தர் விசா

V2 TRAVELS

2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன.




அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.

(C-6728)

0768226240 / 0768226241



## உடனடி வேலைவாய்ப்பு

**சமையல் உதவியாளர்கள்**

வல்வெட்டித்துறையில் இயங்கும் உணவகத்திற்கு தங்கியிருந்து சமையல் செய்யக்கூடியவர்கள் தேவை.

- முன்அனுபவம் விரும்பத்தக்கது.
- ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.




சம்பளம்: 50,000

(C-6728)

CIMS 49A, CHAPEL STREET, JAFFNA 777-068-777



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 8 பரப்பு காணி விற்பனைக்கு**

◆கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில்
பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம்
(இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி)
◆கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
◆இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
◆குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(15942)

076 739 0413
076 436 5814



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 48 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(15942)

076 733 6047
076 755 8606



## காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY

தொடர்ந்து 8 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) என்ற விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இடமிருந்து தொழில் வாய்ப்புகள் யாழ்.பிராந்தியம்

**விற்பனை முகாமையாளர்**

- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி.
- ◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 4 கொடுப்பனவுகள் + மேலும் பல நன்மைகள்.

**உதவி விற்பனை முகாமையாளர்**

- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி.
- ◎ அடிப்படை கொடுப்பனவு 15,000/= + மேலதிக 4 கொடுப்பனவுகள் + மேலும் பல நன்மைகள்.

**நிதி திட்டமிடல் ஆலோசகர்**

- ◎ க.பொ.த (சா/த) 6 பாடங்களில் சித்தி. (கணிதம், தமிழ் உட்பட)
- ◎ 4 வகையான கொடுப்பனவுகள் + மேலதிக பல நன்மைகள்.



(நிபந்தனைகளுக்கு உட்பட்டது.)

(C-6725)

உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 28.06.2023 இற்கு முன்னர் sellaiyakiritharan89@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

218, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.